> இலங்கையில் வாழும் பல்லின, பல சமய மக்களான நாங்கள் அனைவரும் இலங்கையர்கள்.

**தேசிய மரபுரிமைகள் (கலாசார மரபுரிகைகள்)**

பல்லின, பல சமய மக்களைக் கொண்ட சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு கலாசார மரபுரிமைகளையும், கலாசாரக் கூறுகளையும் இலங்கையில் காணக் கூடியதாயுள்ளன. இக் கலாசார உரிமைகளினால் நாட்டின் தனித்துவம் தெளிவாகக் காட்டப்படுகிறது.

**கலாசார உரிமைகளைப் பின்வரும் முறையில் வேறுபடுத்தி இனங்காண முடியும்.**

**கலாசார மரபுரிமை (தேசிய மரபுரிமைகள்)**

- காணக்கூடிய மரபுரிமைகள்
  - மனிதன் உருவாக்கியவை
    - வழிபாட்டிடங்கள்
      - ★ மடுத்தேவாலயம்
      - ★ கதிர்காமம்
      - ★ ஸ்ரீமகாபோதி
      - ★ இஸ்லாமிய பள்ளிவாசல்
      - ★ நல்லூர் கோவில்
    - வேறு ஆக்கங்கள்
      - ★ சீகிரியா
      - ★ ரன்மசு பூங்கா
      - ★ யாழ்ப்பாணக் கோட்டை
      - ★ குளங்களும் நீர்ப்பாசனப் பணிகளும்
  - இயற்கையாக உருவானவை
    - ★ சிங்கராஜ வனம்
    - ★ நாமல் பூங்கா
    - ★ ஹிக்கடுவ கடற்கரை
    - ★ வெப்ப நீரூற்றுக்கள்
    - ★ நீர்வீழ்ச்சிகள்
- காணமுடியாத மரபுரிமைகள்
  - பௌதிக ரீதியாகப் பார்க்க முடியாது ஆனால் மனித நடத்தையினால் வெளிப்படுத்தப்படுவன.
    - ★ விருந்தினரை உபசரித்தல்
    - ★ முதியோரைக் கௌரவித்தல்
    - ★ பழக்கவழக்கங்கள்
    - ★ மதிப்பு மரியாதை

> மிகப் பழைய காலத்திலிருந்தே இலங்கை மக்கள் விருந்தினரை உபசரிப்பதில் நாட்டமுள்ளவர்கள் எனக் கீழைத்தேச நாடுகளிலும், மேலைத்தேச நாடுகளிலும் புகழ் பெற்றிருந்தனர்.



www.thavasilearningcity.blogspot.com

இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளதொரு தீவான இலங்கை ஏறக்குறைய 65,610 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள நிலப்பகுதியினைக் கொண்டுள்ளது. இந்நிலப்பகுதியினுள் பல்வேறுபட்ட பௌதிக மற்றும் மானிடப் பண்புகளுடன் கூடிய ஒன்றுக்கொன்று வேறுபட்ட தெளிவான வேறுபாடுகளுடனான நிலத் தோற்றங்கள் சிலவற்றை இனங்காண முடியும்.

இலங்கையின் பிரதான நிலத் தோற்றங்கள், மலைநாட்டு நிலத் தோற்றம், உலர்வலய நிலத்தோற்றம், ஈரவலய நிலத்தோற்றம், யாழ்ப்பாணக் குடாநாடும் அதனை அண்மித்த நிலத் தோற்றங்கள், தீவுப்பகுதிகள், கரையோர நிலத்தோற்றம் போன்ற பிரதேச ரீதியான நிலத் தோற்றங்களையும், அவற்றுக்குரிய விசேட பண்புகளையும் கற்பதே இவ்வத்தியாயத்தின் பிரதான நோக்கமாகும்.

## மலைநாட்டு நிலத்தோற்றம்

கடல் மட்டத்திலிருந்து 300 மீற்றருக்கு மேற்பட்ட உயரத்தில் உள்ள நிலங்களில் மலைநாட்டு நிலத்தோற்றத்தைக் காணலாம். பிரதானமாக இலங்கையின் மத்திய மலைநாட்டிலும், சப்பிரகமுவ மலைகளிலும் இவ்வாறான நிலத் தோற்றங்கள் காணப்படுகின்றன. இலங்கையின் ஏனைய நிலத்தோற்றங்களோடு ஒப்பிடும் போது, சிக்கலான பௌதிக நிலத்தோற்ற மொன்றை இவ்வலயத்தினுள் அவதானிக்கலாம்.


www.thavasilearningcity.blogspot.com

## செயற்பாடுகள்

மலை நாட்டின் நிலத்தோற்றத்தைக் காட்டும் உரு 3.2 ஐ அவதானித்து அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| மலைத்தொடர்கள் | நீர்வீழ்ச்சிகள் | மேட்டுநிலங்கள் |
|---|---|---|
| | | |

★ மலைத் தொடர்கள், மேட்டு நிலங்கள் உயர்ந்த மலைகளில் இருந்து கீழிறங்கி ஓடி வரும் நதிகள், சாய்வுகளின் வழியே பாயும் நீர்வீழ்ச்சிகள், கணவாய்கள் போன்றவை பிரதான பௌதிக அம்சங்களாகும்.

★ நிலத்தோற்றத்துக்கும், காலநிலைக்கும் ஏற்ப வளர்ச்சியடைந்துள்ள தாவரப் போர்வையைக் கொண்டுள்ளது.

★ தேயிலைப் பயிர்ச்செய்கையுடன் இணைந்த நிலத்தோற்றம் மலை நாட்டுக்கு விசேடமானதாகும். தேயிலைத் தொழிற்சாலைகள், அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள், தொழிலாளர்களின் வீடுகள், விருத்தியடைந்த வீதி வலைப்பின்னல் போலவே தோட்டங்களில் வேலை செய்யும் மக்களுக்கேயுரிய கலாசாரமும் தெளிவாகத் தெரியும் விசேட அம்சங்களாகும்.

★ தரைத்தோற்ற வேறுபாடுகளுக்கமைய உருவாக்கப்பட்டுள்ள வளைவு களுடன்கூடிய வீதி வலைப்பின்னலும், மலைச் சாய்வுகளில் அமைக்கப் பட்டுள்ள வீடுகளும் மலைநாட்டு நிலத்தோற்றத்துக்குரிய ஒரு விசேட பண்பாகும்.

★ வர்த்தகத்தை அடிப்படையாகக்கொண்டு செய்கை பண்ணப்படும் காய் கறிகள், பழங்கள், பூச்செய்கை என்பனவற்றோடு புல் நிலங்களை அண்டிய விலங்கு வேளாண்மையையும் இவ்வலயத்தில் காணலாம்.

★ உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மலை நாட்டினை மிகவும் விரும்புகின்றனர். எனவே சுற்றுலாக் கைத்தொழில் அதனோடு இணைந்ததாக விடுதிகள் சுற்றுலா விடுதிகள், ஓய்வு, பொழுதுபோக்கு, விளையாட்டு என்பனவற்றுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் ஆகியனவும் இவ்வலய நிலத்தோற்றத்தின் பிரதான அம்சங்களாகும்.


www.thavasilearningcity.blogspot.com

**செயற்பாடுகள்**

1. மலைநாட்டின் முக்கியமான பௌதிக அம்சங்களைப் பெயரிடுக.

2. மலைநாட்டு நிலத்தோற்றத்தைக்கொண்ட பிரதேசங்களில் காணக் கூடிய மானிடச் செயற்பாடுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றைத் தயாரிக்க.

3. மலைநாட்டு வலயத்தின் நிலத்தோற்றத்தைச் சித்திரமாக வரைக.

4. மலை நாட்டின் பௌதிக அம்சங்கள், மானிட நிலத்தோற்றத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என விளக்குக.

5. இலங்கையின் மத்திய மலைநாட்டைக் காட்டும் தேசப்படமொன்றில் மலைத்தொடர்கள், மேட்டுநிலங்கள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் கணவாய் களுக்கான உதாரணங்களில் இரண்டு வீதம் குறித்துப் பெயரிடுக.

**உலர் வலய நிலத்தோற்றம்**

இலங்கையின் நீர்வள நாகரிகம் ஆரம்பித்த பிரதேசமாக இவ்வலயத்தை அறிமுகம் செய்யலாம். முக்கியமாக வடக்கு, வட மத்திய, கிழக்கு, தென் கிழக்குப் பிரதேசங்கள் உலர் வலய நிலத்தோற்றங்களுக்குரியன. கடும் வரட்சி, அதிக வெப்பம், நிச்சயமற்ற குறைவான மழைவீழ்ச்சி, உயர் ஆவியாக்கம் போன்ற காரணிகளின் அடிப்படையில் உலர்வலய நிலத்தோற்றம் ஒழுங்கமைந்துள்ளது. உலர் வலயச் சூழலுக்குகேற்ப கட்டியெழுப்பப்பட்ட மானிட நிலத்தோற்றமொன்றையும் காணமுடிகின்றது.

★ சமவெளிகள், ஆங்காங்கே அமைந்துள்ள எச்சக்குன்றுகள், வருடத்தின் ஒரு காலப்பகுதியில் வற்றிப்போகும் நதிகள், குட்டையான தடித்த பட்டைகளையும் சிறிய இலைகளையும் கொண்ட மரங்கள் போன்றவை உலர் வலயப் பௌதிக நிலத் தோற்றத்தின் முக்கியமான அம்சங்களாகும்.

★ இலங்கையின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள மன்னார், புத்தளம் என்பனவற்றைப் போலவே தென்கிழக்கில் அம்பாந்தோட்டைப் பிரதே சங்களில் நிலவும் அரைகுறை வறள் வலயக் காலநிலைக்கேற்ப வளர்ந்துள்ள புற்கள், முட்பற்றைக் காடுகள் ஆகியனவும் நிலத்தோற்றத்தின் விசேட பண்புகளாகும்.

★ சீகிரியா, தம்புள்ள, ரிதிகல, கதிர்காமம் ஆகியன இவ்வலயத்தில் அமைந்துள்ள எச்சக்குன்றுகளுள் சிலவாகும். எச்சக்குன்றான சீகிரியா, அமைவிடத்தின் அடிப்படையில் புராதன காலம் தொடக்கம் ஒரு பாதுகாப்பு அரண் ஆகும்.


www.thavasilearningcity.blogspot.com

★ உலர் வலயத்தில் சிறிய சாய்வுகளுக்கூடாக ஓடிவரும் நதிகளை மறித்து நிர்மாணிக்கப்பட்டுள்ள குளங்களும் நிலத்தோற்றத்தின் சிறப்பான அம்சங்களாகும். மழை நீர் மற்றும் மகாவலி கங்கையின் மூலமாக இந்தக் குளங்களில் பெரும்பாலானவைக்கு நீர் வழங்கப்படுகின்றன. நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு உலர் வலயத்தில் பெரியளவு நிலப்பகுதியில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. நெற்பயிர்ச் செய்கையோடு தொடர்புபட்ட வகையில் அரிசி ஆலைகளும், அரிசி மாவினை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் இணைந்த கைத்தொழில் களும் உருவாகியுள்ளன.




உரு 3.3

இலங்கையின் உலர் வலய நிலத்தோற்றம்



www.thavasilearningcity.blogspot.com

இலங்கையின் பண்டைய நீர்வள நாகரிகத்துக்கேயுரிய பண்புகள் தற்போதைய உலர் வலய நிலத்தோற்றத்தின் மானிட அடையாளங்களாகும்.

★ மகாவலி நீரின் மூலம் உயர்நிலப் பகுதிகள், தாழ்நிலப் பகுதிகள் இரண்டிலும் பயிர் செய்வதற்காகக் குடியேற்றப்பட்ட மக்களுக்குச் சகல வசதிகளுடனும் ஏற்படுத்தப்பட்ட திட்டமிடப்பட்ட விவசாயக் குடியேற்றங்களை உலர் வலய நிலத்தோற்றத்தில் காணலாம்.

★ மழைவீழ்ச்சியில் தங்கியுள்ள சேனைப் பயிர்ச்செய்கையும், இவ் வலயத்தின் முக்கியமான ஓர் அம்சமாகும். சுற்றிவர வேலியையும், சிறிய தற்காலிக மண் வீட்டையும் உள்ளடக்கிய விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள சேனை, உலர் வலய நிலத்தோற்றத்தில் படிப்படியாக மாற்றமடைந்து வருமோர் விடயமாகும்.

★ உலர் வலய நிலத்தோற்றத்தினுள் காணப்படுகின்ற யால, வில்பத்து, குமண போன்ற சரணாலயங்களும், சோமாவதி, மதுறு ஓயா, வஸ்கமுவ போன்ற தேசிய பூங்காக்களும் விசேட அம்சங்களாகும்.

★ மக்களால் தொடர்ச்சியாக வழிபாடு செய்யப்பட்டு வருவதும், சமய ரீதியாக முக்கியம் பெறுகின்ற பல்வேறுபட்ட சமயத் தலங்கள் இந் நிலத்தோற்றத்தின் மற்றுமொரு முக்கியமான அம்சமாகும். இதற்கு அனுராதபுரத்தின் புனித வெள்ளரசு மரமும், தூபியும், மன்னார் மடு மாதா தேவாலயமும், கோணேஸ்வரன் கோவில் திருகோணமலை, கதிர்காம முருகன் ஆலயம் மற்றும், கிழக்குப் பிரதேசங்களில் இஸ்லாமிய பள்ளி வாசல்கள் போன்றனவற்றை உதாரணங்களாகக் காட்டலாம்.

### செயற்பாடுகள்

1. உலர் வலயத்தில் பௌதிக, மானிட நிலத்தோற்றங்களுக்கேயுரிய சிறப்பம்சங்களை வெவ்வேறாக எழுதுக.

2. நீர்ப்பற்றாக்குறைக்குத் தீர்வாக உலர் வலய மக்கள் கையாளும் முறைகள் எவை?

3. இலங்கைப் புற உருவப் படமொன்றில் அனுராதபுரம், மடுமாதா தேவாலயம், கதிர்காமம், சீகிரியா, வில்பத்துச் சரணாலயம், சோமாவதி வனப்பூங்கா போன்றவற்றோடு உலர்வலயத்தில் காணப்படும் குளங்கள் ஐந்தினையும் குறித்துப் பெயரிடுக.


www.thavasilearningcity.blogspot.com

அன்றாடம் இயக்கமுடைய நடமாடும் சனத்தொகை, வாகனங்கள் மற்றும் சேவை நடவடிக்கைகள் மூலம் உருவாகியுள்ள இயங்கு தன்மை இவ்வலயத்தின் ஒரு விசேட பண்பாகும்.

★ சமவெளிகள், மேடு பள்ளங்களுடன் கூடிய நிலத்தோற்றப் படிமுறை அமைப்பு, வருடம் பூராகவும் பாய்ந்தோடும் நதிகள், சேற்று நிலங்கள் என்பனவற்றுடன் கூடிய பௌதிக நிலத்தோற்றம் ஒன்றும் அதற்கே உரிய செழிப்பான தாவரப் போர்வையும், உயிர்ப் பல்லினத் தன்மையும் ஈரவலய நிலத்தோற்றத்தின் சிறப்பம்சங்களாகும்.

★ அதிக மழைவீழ்ச்சி காரணமாக அடிக்கடி வெள்ளப்பெருக்கும், நிலச்சரிவும் ஏற்படுவதால் நிலத்தோற்றம் தொடர்ச்சியாக மாற்றமடைகின்றது.

★ அதிக மழைவீழ்ச்சி காரணமாக நதிகள் பெருக்கெடுப்பதால் நதிக்கரை வழியே உருவாகியுள்ள வெள்ளச் சமவெளிகள், வளமான விவசாய நிலங்களாக மாற்றம் பெற்றுள்ளன. களனி கங்கையின் வெள்ளச் சமவெளிகளை அண்டி மரக்கறி உள்ளிட்ட தோட்டச் செய்கை முக்கியம் பெறுகின்றது.

★ அதிக மக்கள் தொகையைக் கொண்டுள்ள இவ்வலயத்தில் பௌதிக நிலத் தோற்றத்தின் மீது கட்டியெழுப்பப்படுகின்ற மானிட நிலத் தோற்றமும் சிக்கலான பல பண்புகளைக் கொண்டுள்ளது.

★ கடற்கரையோரங்களை அண்டித் தென்னைச் செய்கை, நதிப் பள்ளத் தாக்குகளில் நெல் மற்றும், தென்னைச் செய்கை, சாய்வுகளில் இறப்பர் மற்றும் தேயிலைச் செய்கை எனப் பல்வேறுபட்ட விவசாய நிலப் பயன்பாட்டு முறைகளை ஈரவலயத்தில் காண முடிகின்றது.

★ நகர, கைத்தொழில், சேவை மத்திய நிலையங்களாக கொழும்பு, கம்பஹா, மாத்தறை, காலி, மீகமுவ, கண்டி, களுத்துறை போன்ற நகரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை இந் நிலத்தோற்றத்தினுள் அடையாளம் காணப்படக்கூடிய முக்கியமான அம்சங்களாகும்.

★ கட்டு நாயக்கா, கொக்கல, பியகம போன்ற சுதந்திர வர்த்தக வலயங்களின் தோற்றம், இரத்மலானை எக்கல நகரங்களை அண்டிக் கைத்தொழில் குடியேற்றங்கள் உருவாகியமை ஆகியவற்றின் காரணமாக, தொழில் வாய்ப்புக்களைத் தேடிப் பிரதான நகரங்களுக்கு இடம் பெயர்ந்து வந்த மக்கள் ஈரவலயத்தில் குழுமியுள்ளனர்.


www.thavasilearningcity.blogspot.com

★ வைத்தியசாலைகள், பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், வங்கிகள், நீதிமன்றங்கள், கடைத்தொகுதிகள் போலவே, நிலத்தின் அளவு வரையறுக் கப்பட்டுள்ளமை காரணமாகச் செங்குத்தான அடுக்கு மாடிக் கட்டடங்கள் என்பனவற்றினாலும் ஈரவலய நிலத்தோற்றத்தின் சிக்கலான தன்மை புலப்படுகின்றது. மனிதத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இலகுவான முறையில் அபிவிருத்தி அடைந்துள்ள உட் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு பிரதேசமாகவும் இவ்வலயத்தை அடையாளம் காணலாம்.

★ விருத்தி அடைந்துள்ள வீதி வலைப்பின்னல், அதிவேகப் பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள் என்பனவற்றுடன் கூடிய விருத்தியடைந்த போக்குவரத்து வலைப்பின்னல் ஈரவலய நிலத்தோற்றத்தின் மற்றுமொரு முக்கிய அம்சமாகும்.

★ துரிதமாக விருத்தி அடையும் திட்டமிடப்பட்ட நகரங்கள் போலவே, நகர மற்றும் கிராமியப் பிரதேசங்கள் கலந்து காணப்படுகின்ற நிலத்தோற்ற மொன்றை இங்கு காணலாம். இந்நகரங்களில் கிடைக்கின்ற சேவை களைப் பெற்றுக் கொள்வதற்கு நாளாந்தம் வருகை தருகின்ற அதிக சனத்தொகையையும், அதனோடு இணைந்த வகையில் காணக்கூடிய தாகவுள்ள அதிக வாகனங்களும் நிலத்தோற்றத்தின் இயங்கு தன்மையை வெளிக்காட்டுகின்றன.

இலங்கையின் தலை நகரமான ஸ்ரீ ஜயவர்த்தனபுரக் கோட்டை மற்றும் வர்த்தக நகரமாகிய கொழும்பு ஆகியன ஈரவலயத்தில் அமைந்துள்ளன.

களிமண் அகழ்தல், வரையறை இன்றி நிகழும் இரத்தினக்கல் அகழ்வு, காடழிப்பு, சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாகப் பாதிக்கப்பட்ட நிலத்தொகுதி காணப்படுவதும் இவ்வலயத்தின் விஷேட அம்சங்களில் ஒன்றாகும். எனவே நிலச்சரிவுகள், தரைக்கீழ் நீரூற்றுக்கள் வற்றுதல், கட்டடங்கள் இடிந்து விழுதல், நுளம்புகளின் பெருக்கம் போன்ற பிரச்சினைகளும் எழுந்துள்ளன.


www.thavasilearningcity.blogspot.com

**செயற்பாடுகள்**

1. இலங்கையின் புறவுருப் படமொன்றைப் பிரதி செய்து கொள்ளுங்கள்.

   i. ஆசிரியரின் அறிவுறுத்தலைப் பெற்று அதில் ஈரவலயத்தை வேறுபடுத்தி வரையுங்கள்.

   ii. தேசப்படப் புத்தகமொன்றின் உதவியுடன் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி ஆகிய நகரங்களையும் கட்டுநாயக்கா, கொக்கல, பியகம போன்ற முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களையும் குறித்துப் பெயரிடுங்கள்.

2. ஈரவலய நிலத்தோற்றத்தில் காணக்கூடிய ஆறு பண்புகளை எழுதுங்கள்.

3. ஈரவலயத்தின் நிலத்தோற்றம் இயங்குதன்மை உள்ளதாகக் காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள மூன்று காரணங்களை எழுதுங்கள்.

4. ஈரவலய நிலத் தோற்றத்தினை ஒரு சித்திரம் மூலம் அல்லது படம் மூலம் காட்டுங்கள்.

**யாழ்ப்பாணக் குடா நாடும், அதனை அண்டிய தீவுகளின் நிலத்தோற்றமும்**

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடா நாடும், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, நயினா தீவு போன்ற சில தீவுளும் காணப்படுகின்றன.

1. சமவெளிகள், களப்புக்கள், தீவுகள், மணல்வெளிகள், வளமான சிவப்பு மண், சுண்ணாம்புக் கல், மண் மற்றும் தரைக்கீழ் நீர் யாழ்ப்பாணக் குடாநாட்டினதும், அதனை அண்டிய பிரதேசங்களினதும் முக்கிய அம்சங்களாகும்.

2. இப்பிரதேசம் குறைவான மழைவீழ்ச்சி, உயர் ஆவியாக்கம் போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட பௌதிகச் சூழல் ஒன்றையும், மானிட நிலத்தோற்றம் ஒன்றையும் கொண்டுள்ளது.


www.thavasilearningcity.blogspot.com

3. ஆரம்பகாலம் தொடக்கம் பயன்படுத்தப்பட்டு வந்த கிணறுகளாலும், தற்போது நீர்ப்பம்பிகள் மூலம் நீரை இறைத்தும் மேற்கொள்ளப்படும் வெற்றிகரமான விவசாய நிலப்பயன்பாட்டுமுறை மானிட நிலத் தோற்றத்தின் பிரதான அம்சமாகும். இத்தரைக்கீழ் நீரை நம்பி விவச ாய நிலங்களை அண்டி உருளைக்கிழங்கு, மிளகாய், சிறிய வெங்காயம், பீற்றூட் போன்ற மரக்கறிகளும் மா, வாழை, திராட்சை ஆகிய பழங்களும் உற்பத்தியாக்கப்படுகின்றன.

4. பிரதேசத்தின் வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் கரையோர மீன்பிடிக் கைத்தொழில், பனையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில், உப்பு உற்பத்தி போன்றவை மானிட நிலத்தோற்றத்தின் முக்கிய அம்சங்களாகும்.

5. பனை ஓலைகளால் வேயப்பட்ட கூரைகள், வேலிகளால் மறைக்கப்பட்ட வீடுகள், பனையை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பண்டங்கள், பனையினாலான பொருட்கள் என்பவற்றை இங்கு பொதுவாகக் காணலாம்.

6. இந்து சமயத்தை அடிப்படையாகக்கொண்டு கட்டியெழுப்பப்பட்ட இக் கலாசாரத்தில் கோயில்கள்(நல்லூர்) சமய விழாக்கள், சமய நம்பிக்கையுடைய பக்தர்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றனர்.

7. அதேபோன்று சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய நிலத்தோற்ற மொன்றும், நீச்சல், கடற்கரை போன்றனவற்றிற்குத் தீவுகளை அண்டிய கடற்பகுதி, கிழக்குக் கரையோரம், சிறந்ததாகக் காணப்படுகின்றது. சுண்டிக் குளம் பறவைகள் சரணாலயம், நயினாதீவு கோவில் மற்றும் விகாரை போன்றவற்றை உள்ளடக்கி சுற்றுலா வலயமாகவும் இப் பிரதேசம் பிரசித்தி பெற்றுள்ளது.


www.thavasilearningcity.blogspot.com

இப்பிரதேசம் சிக்கலான தன்மையுடைய நிலத்தோற்றத்தைக் கொண்டிருந்த போதும் மக்களின் விடாமுயற்சி, கடின உழைப்பு, சிறந்த ஒழுக்கநெறி என்பனவற்றால் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரத்தையும், சிறப்பான கலாசாரத் தனித்துவத்தையும் கொண்டதாக இருக்கின்றது.

**செயற்பாடுகள்**

1. யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் தீவுகளை அண்டிய பௌதிக, மானிட நிலத்தோற்றத்தின் சிறப்பம்சங்களை வெவ்வேறாக எழுதுங்கள்.

2. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுகளை அண்டிய நிலத்தோற்றத்தில் காணப்படுகின்ற கலாசாரச் சிறப்பியல்புகள் தொடர்பாக ஒரு கையேட்டினைத் தயாரியுங்கள்.

3. இலங்கையின் மாதிரி புறவுருவப் படமொன்றில் ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினா தீவு, நல்லூர் கோயில், ஆனையிறவு உப்பளம் ஆகியனவற்றைக் குறித்து பெயரிடுங்கள்.

4. யாழ் குடாநாட்டு மக்களுக்கு பனை மரம் பயன்படுகின்ற முறை தொடர்பாக விளக்குக.

## கரையோர நிலத்தோற்றம்

இலங்கையைச் சூழவுள்ள தீவுகள், குடாக்கள், களப்புக்கள், முனைகள், சதுப்பு நிலங்கள் ஆகியன நிலவுருவங்களைக்கொண்ட கரையோரம் அதற் கேயுரிய தனித்துவமான நிலத்தோற்றம் ஒன்றைக் கொண்டுள்ளது. கரையை அண்டிக் காணப்படுகின்ற சதுப்புநிலத் தாவரத் தொகுதிகள், முருகைக் கற்பாறைகள் போலவே கண்ணைக் கவரும் மணல் வெளிகள் ஆகியவை இப்பௌதிக நிலத்தோற்றத்தின் முக்கிய அம்சங்களாகும். இப்பௌதிகச் சூழலை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட மானிட நிலத் தோற்றம் ஒன்றையும் கரையோரச் சூழலில் காணமுடிகின்றது.

1. தங்கல்ல, அம்பாந்தோட்டை, பாசிக்குடா, உனவடுன, அறுகம் குடா போன்ற அழகான கரையோரங்கள், ஹிக்கடுவ மனதைக் கவரும் முருகைக் கற்பாறைகள் போன்றவை சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்துள்ளன. இப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விடுதிகள், உணவகங்கள்,


www.thavasilearningcity.blogspot.com

தொல்பொருட் காட்சியகங்கள், வெளிச்ச வீடுகள், சமய முக்கியத்துவமிக்க இடங்கள், சரணாலயங்கள், உல்லாச விடுதிகள், தேசியப் பூங்காக்கள் போன்றன சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாகச் சஞ்சரிப்பதற்குக் காரணமா கியுள்ளன.

2. கரையோரத்தை அண்மித்து அமைந்துள்ள ஆழமற்ற கடற்பரப்புகளும், கடனீரேரிகளும், சதுப்பு நிலங்களையும், உவர் சதுப்புக்களையும் அண்டி நடைபெறும் மீன்பிடிக் கைத்தொழிலும், கரையோரம் வழியே பரந்துள்ள மீன்பிடிக் குடியிருப்புகளும் வலயத்தின் சிறப்பியல்புகளாகும்.

3. கரையோரத்தில் காணப்படும் வளங்களை அடிப்படையாகக்கொண்டு உருவாகியுள்ள பல்வேறு கைத்தொழில்களும் மானிட நிலத்தோற்றத்தின் முக்கிய அம்சங்களாகும். தும்பினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், கருவாடு காயவைத்தல், சுண்ணாம்புக்கல் உற்பத்தி என்பவை உதாரணங்களாகும்.

4. இப் பிரதேசங்களில் நிகழும் முருகைக் கற்பாறைகளை அகழ்தல், கரையோர மணல் அகழ்தல் போன்ற மனித நடவடிக்கைகள் காரணமாகக் கரையோர நிலத்தோற்றதுக்குப் பாதிப்பு ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

இலங்கை ஒரு சிறிய தீவாக இருப்பினும், அதனுள் ஒன்றுக் கொன்று வேறுபட்ட தனித்துவமான நிலத்தோற்றங்கள் காணப்படுகின்றமையை நீங்கள் விளங்கிக்கொண்டிருப்பீர்கள். இலங்கையின் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியோ அல்லது வடக்கிலிருந்து, தெற்கு நோக்கியோ ஒருவர் பயணிப்பாராயின் இந் நிலத்தோற்றங்கள் யாவற்றையும் ஒரே நாளிலேயே அவதானிக்கலாம்.


www.thavasilearningcity.blogspot.com

## செயற்பாடுகள்

1. இலங்கையின் கரையோரத்தை அண்மித்த நிலத்தோற்றத்தின் சிறப்பியல்பு களைப் பெயரிடுங்கள்.

2. இலங்கைப் படமொன்றில் குடாக்கள், கடனீரேரிகள், முனைகள், தீவுகள் ஆகியனவற்றில் இரண்டு வீதமும், கரையோரத்தில் அமைந்துள்ள சுற்றுலாப்பயணிகளைக் கவரக்கூடிய இடங்கள் மூன்றினையும் குறித்துப் பெயரிடுங்கள்.

## ஒப்படைகள்

1. இலங்கைத் தேசப்படமொன்றில் நீங்கள் கற்ற நிலத்தோற்ற வலயங்கள் ஐந்தினை வேறுபடுத்தி வரையுங்கள்.

2. இவ்வலயங்கள் ஐந்திற்குமுரிய நிலத்தோற்றச் சிறப்பியல்புகளை உள்ளடக்கிய கைந்நூல் ஒன்றினைத் தயாரியுங்கள்.

3. நீங்கள் வாழ்கின்ற பிதேசத்தின் நிலத்தோற்றத்தை ஆய்வுசெய்து அங்கு காணக்கூடிய பௌதிகப் பண்புகளையும், மானிடப் பண்புகளையும் விளக்குங்கள்.



## கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| நிலத்தோற்றம் | - Landscape | - භූ දර්ශනය |
| மலைத்தொடர்கள் | - Mountain ranges | - කඳුවැටි |
| நீர்வீழ்ச்சிகள் | - Waterfalls | - දියඇලි |
| மேட்டு நிலங்கள் | - Plateaus | - සානු |
| கணவாய்கள் | - Gaps | - කපොලු |


www.thavasilearningcity.blogspot.com

| | | |
|---|---|---|
| எச்சங்கள்/சிதைவுகள் | - Ruins | - නටඹුන් |
| நீர்வள நாகரிகம் | - Hydraulic Civilization | - වාරි ශිෂ්ටාචාරය |
| எச்சக்குன்றுகள் | - Residual hills | - ශේෂ කඳු |
| பாதுகாப்பு அரண் | - Fortress | - ආරක්ෂක බලකොටුව |
| வனப்பூங்கா | - Park | - වනෝද්‍යාන |
| தாவரப்போர்வை | - Vegetation cover | - වෘක්ෂලතා වැස්ම |
| உயிரினப் பல்வகைமை | - Bio diversity | - ජෛව විවිධත්වය |
| வெள்ளச் சமவெளி | - Flood plain | - පිටාර තැන්න |
| தோட்டச்செய்கை | - Koratu cultivation | - කොරටු වගාව |
| பௌதிக நிலத்தோற்றம் | - Physical landscape | - භෞතික භූ දර්ශනය |
| மானிட நிலத்தோற்றம் | - Human landscape | - මානුෂ භූ දර්ශනය |
| விவசாய நிலப்பயன்பாட்டு முறை | - Land use pallor of agriculture land | - කෘෂි භූමි පරිභෝග රටාව |
| வர்த்தக வலயம் | - Trade zone | - වෙළෙඳ කලාප |
| கைத்தொழில் குடியேற்றம் | - Industrial colony | - කාර්මික ජනපද |
| இடப்பெயர்வு | - Migration | - සංක්‍රමණය |
| உட்கட்டமைப்பு வசதிகள் | - Infrastucture facilities | - යටිතල පහසුකම් |
| அதிவேகப் பெருந்தெருக்கள் | - Express high ways | - අධිවේගී මාර්ග |
| மேம்பாலங்கள் | - Fly over | - ගුවන් පාලම් |


www.thavasilearningcity.blogspot.com

6. i. நீங்கள் வாழ்கின்ற அல்லது உங்கள் பாடசாலையைச் சுற்றியுள்ள பிரதேசம் ஒன்றில் இயற்கை அனர்த்தம் ஒன்று ஏற்பட்டிருப்பின் அப்பிரதேசத்துக்குச் சென்று அது தொடர்பாக அவதானியுங்கள்.

ii. அவ்வனர்த்தத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

iii. அவ்வனர்த்தம் நிகழ்வதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்களைத் தேடியறிந்து கொள்ளுங்கள்.

iv. அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

v. அப்பாதிப்புக்களைத் தடுப்பதற்காக அல்லது குறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைக் கலந்துரையாடி முன்வையுங்கள்.



## கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| இயற்கை இடர்கள் | - Natural Hazards | - ස්වාභාවික උපද්‍රව |
| அனர்த்தங்கள் | - Disasters | - ආපදා |
| வரட்சி | - Drought | - නියඟය |
| காற்று | - Wind | - සුළං ප්‍රවාහ |
| பூகோள வெப்பமடைதல் | - Global Warming | - ගෝලීය උණුසුම |
| காட்டுத் தீ | - Bush Fire | - ලැව් ගිනි |
| வெள்ளப்பெருக்கு | - Flood | - ගංවතුර |
| நிலவழுக்குகை/நிலச்சரிவு | - Earth Slips/ Landslides | - නායයෑම් |


www.thavasilearningcity.blogspot.com

